**R 5804 (page 349)**

# அழிவுக்கு முன்னானது அகந்தை.

## "PRIDE GOETH BEFORE DESTRUCTION"

*"அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை." நீதிமொழிகள் 16:18*

எருசலேமிலே உசியா என்ற ராஜா பெரியவனும் மகா செழிப்பானவனுமாய் இருந்தான். தேவன் பக்கம் திரும்பி ஒரு நல்ல ஆரம்பத்தை ஏற்படுத்தினான். அவன் தனது தலைநகரையும் தனது நாட்டின் மற்ற பகுதிகளையும் எதிரிகளிடமிருந்து பாதுகாத்து நல்ல நிலைமையில் வைத்திருந்தான். இஸ்ரயேலின் யுத்தங்களைப்பற்றி நினைக்கும்போது, அந்த தேசம் கொஞ்ச காலம் தேவனுடைய ஆளுகையை பூமியில் குறிப்பிட்டது என்பதையும், வேறு எந்த தேசமும் இதற்கு முன்பும் பின்பும் இப்படி இருந்ததில்லை என்பதையும் நாம் நினைவுகூர வேண்டும்.

இஸ்ரயேலின் ராஜாக்கள் தெய்வீக அதிகாரத்தினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள். வேறு எந்த ராஜாக்களும் "கர்த்தருடைய ராஜ்யத்தின் சிங்காசனத்தில் உட்கார்" என்று சொல்லப்படவில்லை. இதற்கு முன்பும் பின்பும் வேறு எந்த ராஜாவும் இப்படி ராஜ்யத்தை பெற்றிருக்கவில்லை. எனினும் அவர்களது ராஜ்யம், "உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பூமியிலே செய்யப்படுவதாக" என்று நாம் தேவனிடம் ஜெபிக்கிற இராஜ்யம் அல்ல. இஸ்ரயேலின் ராஜ்யம் தேவனுடைய ராஜ்யத்துக்கு வெறும் அடையாளமான நிழலான ராஜ்யம் ஆகும். மேசியா அதை ஸ்தாபித்த பிறகே, தேவனுடைய ராஜ்யம் உண்மையிலேயே பூமியில் வரும், மனுக்குலத்தை உயர்த்தவும் ஆசீர்வதிக்கவும் அவர் ஆயிரம் வருஷம் அரசாளுவார். அப்பொழுது நீதியை தேடுகிறவர்களை ஆசீர்வதித்து மற்றவர்களை தண்டித்து திருத்துவார். கடைசியில் திருத்த முடியாதவர்களை இரண்டாம் மரணத்தில் அழிப்பார், இஸ்ரயேல் மற்றும் யூதா ராஜாக்கள் தங்களை பலப்படுத்தி, உறுதிசெய்து, தேவன் தங்களுக்கு கொடுத்திருந்த ராஜ்யத்தை பாதுகாப்பதே அந்த காலத்தின் ஏற்பாடுகளுக்கு மிகவும் இசைவாக இருந்தது.

நமது தலைப்பு வசனத்தின் உண்மைத்தன்மை உசியா ராஜாவில் விளக்கப்பட்டது. அவனது புகழ் வெளிநாடுகளுக்கும் பரவியபோது, தனது பெருமையை உணர ஆரம்பித்தான். பெருமை அவனுக்குள் வந்தது. அவன் தேவனுடைய வெறும் பிரதிநிதி

**R5804 : page 350**

என்பதை மறந்தான். அவனது முதல் கடமை சர்வ வல்லவருக்கு கீழிருந்து தெய்வீக கட்டளையை கேட்டு அதற்கு கீழ்படிவதேயாகும்.

அரசியல் மற்றும் இராணுவ காரியங்களில் பெரிய காரியங்களை நிறைவேற்றின பிறகு உசியா மத காரியத்தில் சாதிக்க முயற்சித்தான். தேவன் அவனைக்குறித்தும் அவனது வெற்றியைக் குறித்தும் தேவன் பெருமை கொண்டார் என்று நினைத்தான். அதே போல பொன்தூப பீடத்துக்கு தூப வர்த்தகத்துடன் ஆசாரியர்கள் நுழையும் விதமாக அவன் ஆலயத்தில் நுழைவதில் தேவன் சந்தோஷப்படுவார் என்று நினைத்தான். ஆலயத்தைப்பற்றியும் அதன் ஒழுங்குகள் பற்றியும் அறிந்தவனாயிருந்தான். ஆனால், தான் அதற்கு மேலானவன் என்று நினைத்தான். அவன் ஆசாரியரை அங்கீகரியாமல் தேவனிடம் நேரடியாக சென்றான்.

தங்களது தொழில் அல்லது அரசியலில் வெற்றிபெற்ற அனேகர் அவர்களது அறிவும் படிப்புமே யேகோவா தேவனுடைய பார்வையில் தேவையானது என்று நினைத்து இதே தவறில் விழுந்து போகிறார்கள். அவர்கள் தாங்கள் ஆலயத்துக்கு சென்று தேவனை அங்கீகரித்ததால், அவர்களினிமித்தம் பெருமை கொண்டு அவர்களை எல்லாவிடங்களிலும் முதல் இடத்தில் வைப்பார் என்று நினைக்கிறார்கள். இது தவறானதாக இருக்கிறது. நித்திய மகாராஜா, "நித்திய வாசியும் மகத்துவமும் உன்னதமானவர்"

அவரை நெருங்குவதற்கு வழிமுறைகளையும் ஒழுங்குகளையும் ஏற்படுத்தியிருக்கிறார், அவரை நெருங்குவதற்கு ஒரே வழிதான் உண்டு, வேறு வழி எதுவும் இல்லை.

## மெல்கிசெதேக் என்னும் ஆசாரியர்

ஒருவர் கூறுகிறதாவது: ஓ! "நான் புரிந்துகொண்டேன். மக்கள் தேவனிடம் நெருங்க வேண்டுமென்றால், அவர்கள் ஆசாரியர்கள் மூலமாகத்தான் நெருங்க முடியும், உசியா ராஜாவும் கூட இஸ்ரயேலின் பிரதான ஆசாரின் மூலமாக தேவனை நெருங்கியிருக்க வேண்டும் என்று நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்! ஆனால் ஆசாரியர்கள் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் என்பதை நான் மறுக்கிறேன். அவர்களில் அநேகர் அறிவில் என்னைக் காட்டிலும் தாழ்ந்தவர்கள்; அவர்களில் அநேகர் குறைவாக படித்தவர்கள்; அவர்கள் வியாபார அறிவே இல்லாதவர்கள். ஆனால் பாமர மக்கள் தேவனை நெருங்குவதற்கு ஆசாரியர்கள் மூலமாக நெருங்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் நான் தேவனை நெருங்குவதற்கு எனது சொந்த அறிவின் பலத்தால் செய்வேன், சர்வவல்லவர் நான் அவரிடம் வருவதில் மிகவும் சந்தோஷமடைவார் என்ற உணர்வுடன் செல்வேன். 'நான் மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன்' என்று நான் ஜெபிக்கும் போது அடிக்கடி கூறுவேன்." (லூக்கா 18:11)

இல்லை, நண்பனே, இது நமது கருத்தும் அல்ல. வேதாகமத்தின் கருத்தும் அல்ல. நாம் இப்போது பார்த்துக் கொண்டிருக்கிற பாடத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடமுமல்ல. கிறிஸ்துவின் சபையில் வேத வாக்கியத்தின்படி அதிகாரம் பெற்ற ஆசாரிய வகுப்பார் பன்னிரண்டு அப்போஸ்தலர்களைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். பரிசுத்த பவுல் யூதாசின் இடத்தை எடுத்துக் கொண்டார். அந்த பன்னிருவரும் வேதவாக்கியங்களின்படி ஒரு ஆசாரிய அதிகாரத்தில் மகா போதகரின் விசேஷித்த கருவிகளாக, வாயாக இருக்கிறார்கள். ஒரு ஆத்துமா தேவனிடம் நெருங்க விரும்பினால் அவர் தனது சபை பிரிவின் மதத்தலைவர்கள் மூலமாக செல்ல வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. எனினும், தேவனை நெருங்க ஒரே வழி நமக்காக அவர் ஏற்படுத்தியிருக்கிற மகா பரிகாரியாகிய இயேசு மட்டுமே என்று குறிப்பிட்டு கூறுகிறோம். "இயேசுகிறிஸ்து நீதியாக இருக்கிறார்;" "மெல்கிசெதேக்கின் முறையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறார்." (எபிரேயர் 5:6) "என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்பதே அவரது செய்தி. "நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்பதே அப்போஸ்தலரின் செய்தி. (அப்போஸ்தலர் 4:12)

## பொன் தூபபீடத்தில் தூபகலசம்

இயேசுவே, உலகத்தை தேவனுடன் ஒப்புரவாக்குவதற்கு தெய்வீக நியமனம் பெற்றவர் என்பதை அறியாதவர்கள் இயேசுவையன்றி தேவனிடம் ஜெபம் மூலம் நெருங்குவதற்கு தேவன் மன்னிக்கலாம். உள்ளத்திலிருந்து உண்மையாக ஜெபித்தால் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அவர்களது ஜெபம் கேட்கப்படலாம். ஏனெனில் அப்போஸ்தலர் கூறுவதுபோல, தேவனுடைய ஏற்பாடுகளை அவர்கள் அறியாமலிருந்ததை "அவர் காணாதவர் போலிருந்தார்."

ஆனால் உசியா ராஜா தெய்வீக ஏற்பாடுகளை அறிந்திருந்தான். அதாவது ஆசாரியன் மூலமாகவே பொன் தூபபீடத்தில் தூபவர்க்கத்தை செலுத்தலாம் என்பதை அறிந்திருந்தான். அதுபோல, இயேசு மகா மெய்யான ஆசாரியர் என்பதையும் அவர் மூலமாகவே தேவனிடம் ஜெபிக்க வேண்டும் என்பதையும் அறிந்தவர்கள் அப்படிச் செய்யாதிருந்தால் தண்டனைக்கு கீழாக வருவார்கள். உசியா ராஜா தன்னுடைய கர்வத்தினாலும் அகந்தையினாலும் குஷ்ட வியாதியினால் அடிக்கப்பட்டான்.

குஷ்டரோகம் வேதவாக்கியங்களின்படி பாவத்துக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது. உசியாவின் அனுபவம் ஒரு முன்

அடையாளமாக இருக்கிறது. இயேசு தேவனால் நியமிக்கப்பட்ட ஆசாரியர் என்பதை அறிந்து ஜெபத்தில் அவரை ஒதுக்குபவர்கள் தெரிந்தே பாவம் செய்தவர்களாக கருதப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். தண்டனையானது அவர்கள் முன்னர் பெற்றிருந்த அறிவுக்கு தக்கதாக இருக்கும்.

## ஆசாரியரான எண்பது பராக்கிரமசாலிகள்

ராஜா ஆலயத்தின் பரிசுத்த ஸ்தலத்திற்கு பொன் தூப பீடத்தில் தூபத்தை செலுத்த நுழைந்த பொழுது இவரது பலிக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதான ஆசாரியரும் உதவி ஆசாரியர்கள் எண்பது பேரும் பின்தொடர்ந்து வந்தார்கள். இது அவர்களது கடமை. அவர்கள் பராக்கிரமசாலிகள், தைரியமுள்ளவர்கள் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் பழங்காலத்தில் ராஜாதான் அதிக வல்லமை உடையவனாக இருந்தான். உசியா ராஜா தன்னை பெரியவனாக எண்ணி பெருமை கொண்டதால் தனது ராஜரீக அதிகாரத்தால் எந்த இடையூறையும் எதிர்க்க நினைத்தான்.

தேவனுடைய ஆலயத்தின் ஊழியத்திற்கான கட்டுப்பாடுகளை ராஜா முன்னமே அறிந்திருந்ததையே அவர்கள் வார்த்தைகளால் எதிர்த்தார்கள். "பரிசுத்த ஸ்தலத்தைவிட்டு வெளியே போம்; மீறுதல் செய்தீர்; இது தேவனாகிய கர்த்தராலே உமக்கு மேன்மையாக லபியாது" என்றார்கள். உண்மையான கனம், உண்மையான ஆசீர்வாதம், உண்மையான செழுமை ஆகியவைகளை தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிராக காண இயலாது. ஆகையால் ராஜாவின் மார்க்கம் அவனுக்கு அவகீர்த்தியை கொண்டு வர வேண்டும். அவன் தேவனை மகிமைப்படுத்தியிருந்தால் அவன் ஆசீர்வாதத்தைப் பெற்றிருப்பான். இதில் சந்தேகமில்லை. ஆனால் அவனது தெய்வீக சட்ட மீறுதலினால் சாபத்தைப் பெற்றுக் கொண்டான்.

நமது தலைப்பு வசனமும் "தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான்" (லூக்கா 14: 11) என்ற நமது ஆண்டவரின் வார்த்தைகளும் விளக்கினதுபோல பாடமானது மிகவும் தெளிவாக இருக்கிறது. ராஜாவுக்கு நல்ல நோக்கம் இருந்தாலும் தன்னை உயர்த்துதலும், பெருமையும் இருந்திருக்கக்கூடாது. நல்ல நோக்கமானது, தெய்வீக ஏற்பாடுகளையும் வாக்குத்தத்தங்களையும் அறிந்துகொள்ள வழி நடத்தியிருக்க வேண்டும். பிரமாணத்தை அறியாது இருப்பது ஒரு சாக்குபோக்கு அல்ல. எனவே அப்போஸ்தலரின் புத்திமதி யாவது, "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படிக்கு ஜாக்கிரதையாயிரு." (2 தீமோத்தேயு 2:15)

பாடமானது தாழ்ச்சியைப் பற்றியதாகும். இது சபைக்கும் உலகத்திற்குமான பாடமாகும். சிலர் பிறவியிலேயே தாழ்மையுள்ளவர்களாகவும், சிலர் அகந்தை உள்ளவர்களாகவும் இருப்பார்கள். தற்கால எதிராளிகளுக்கு எதிராக போராடுவதில் தைரியம் இருந்தாலும் இந்த கிருபையை பொருத்தவகையில் அகந்தை அவர்களுக்கு ஒரு தடையாக இருக்கிறது. நமது மாம்சீக பலவீனத்தினால் இருக்கும் நமது தடைகளானது, இந்த சுவிசேஷயுக அழைப்பின் கீழ் வேறு ஒருவர் ராஜ்யத்தில் பிரவேசிப்பதைக் காட்டிலும் அவ்வளவு சமமில்லாததாகவும் சுலபமானதாகவும் இல்லாதிருக்கிறது. ஏனெனில் எங்கே அதிகமாக கொடுக்கப்படுகிறதோ அங்கே அதிகமாக தேவைப்படுகிறது. கர்த்தரின் நியாயத்தீர்ப்பு மாம்சீக பலவீனம் மற்றும் தோல்விகளின்படி இல்லாமல் இருதயத்தின்படி, முயற்சிகளின்படியாக இருக்கிறது.

தாழ்மை குணத்திற்காக மாத்திரமல்ல, அது இல்லாமல் பரிசுத்த ஆவியின் மற்ற கிருபைகள் வளர்க்கப்பட இயலாது. அப்போஸ்தலர் இந்த ஆவியின் கிருபைகளின் பட்டியலை சாந்தம் என்பதில் ஆரம்பித்து கொடுக்கிறார், இந்த கிருபைகளில் வளர்வதற்கு அல்லது முன்னேறுவதற்கு சாந்தம் இல்லாதிருந்தால் எப்படி முடியும்? சாந்தம் இல்லாதிருந்தால், எப்படி ஒருவர் துன்பத்திலும் சோதனைகளிலும் பொறுமையாகவும் தன்னை ஒப்புக் கொடுக்கவும் முடியும்? எல்லாவற்றிலும் சாந்தமாயில்லாதிருந்தால் எப்படி ஒருவர் எதிராளிகளிடம் அன்பு செலுத்த முடியும்? சாந்தம் இல்லாதிருந்தால் எப்படி ஒருவர்

**R5804 : page 351**

எல்லாரிடமும் பொறுமையாக இருக்க முடியும்? சாந்தம் இல்லாமல் எப்படி ஒருவர் தேவபக்தி உடையவராக இருக்க முடியும்? சாந்தம் இல்லாமல் எப்படி ஒருவர் வேத வாக்கியத்தின்படி அன்புடையவராக இருக்க முடியும்? இந்த கோணத்தில் சபையில் உள்ள அனைவரும் சோதிக்கப்படுவார்கள். மற்ற ஆவியின் கனிகளை வளர்ப்பதற்கு சாந்தமும் தாழ்மையும் அபிவிருத்தி பண்ணப்பட்டு இருதயத்தில் நிரம்பியிருக்க வேண்டும்.

---------------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com